
# இன்பக்கனிகள்

## சிறுவர் பாடல்கள்



ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பக் கனிகள்

சிறுவர் பாடல்கள்

ச. அருளானந்தம், B. A.
கல்வி அதிகாரி

முத்தமிழ்க்கலாமன்றம்
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| *Title:* | INPAKKANIKAL |
| *Author:* | **S. ARULANANTHAM** |
| *Artist:* | **S.A.Arulpaskaran** |
| *Language:* | Tamil |
| *Edition:* | 1st Edition - May 1990 |
| *Copyright:* | **Mrs. L. Arulananthan** |
| *Size:* | ¼ Crown (18½ × 24) |
| *Publisher:* | **Muthamil Kalamanram**<br>Vavuniya,<br>Sri Lanka. |
| *Printer:* | **Chettiar Press**<br>430, K. K. S. Road, Jaffna,<br>Sri Lanka. |
| *Subject:* | Children Poems |
| *Price:* | **Rs. 30/-** |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பாலர்களுக்குக் கல்வி புகட்டுவது தனிக் கலையாகும். மாணவர்களோடு ஒன்றி அவர்களது உள்ளத்தைப் புரிந்து அவர்கள் விரும்பியவாறு கற்பிப்பது இனிமையானது.

ஆடல், பாடல், அபிநயத்தல், கதைசொல்லல் ஆகியன அவர்களால் பெரிதும் விரும்பப்படுவன. நான் ஆரம்ப வகுப்புகளில் அவ்வப்போது இயற்றிக் கற்பித்த பாடல்களையே இங்கு தந்துள்ளேன்.

இவ்வகைப் பாடல்களை நூலாக்கித் தருமாறு வவுனியா மாவட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கிராமோதயசபைத் தலைவர்கள் அணுகி ஊக்கமூட்டினர். அதன் விளைவே இந் நூல்.

ஒவ்வொரு தலைப்பிலும் நான்கு பாடல்கள் உண்டு. அவற்றில் ஒன்றை ஒருவர் அல்லது ஒரு குழுவினர் பாட மற்றதை அடுத்தவர் அல்லது குழுவினர் முறையே பாடி அபிநயம் காட்ட ஒரு நாடகம் போல் அருமையாக அமையும். நான் பெற்ற அனுபவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ளும் ஆவலில் உங்கள்முன் இந் நூலைச் சமர்ப்பிக்கின்றேன். உங்களது ஆக்கபூர்வமான அறிவுரைகளை ஆவலோடு எதிர்பார்க்கின்றேன்.

இந் நூலை வெளியிடுவதற்கு ஆதரவு தந்த அனைவருக்கும் அணிந்துரை தந்து ஊக்குவித்த முதுபெரும் கவிஞர் இ. முருகையன் அவர்களுக்கும், பல ஆக்கபூர்வமான அறிவுரைகள் தந்து நூலாக்கத்தில் பெரும் பங்குகொண்டுழைத்த எனது மாணவனும் ஆசிரியருமான கட்டைபறிச்சான் க. கனகசிங்கம், இலக்கிய ஆர்வமுடைய எழுத்தாளர் அகளங்கன், படம் வரைந்து உதவிய எனது மகன் அருள் பாஸ்கரன், அழகாக அச்சிட்டு உதவிய செட்டியார் அச்சகத்தினர் ஆகியோருக்கும், வவுனியா முத்தமிழ் கலாமன்றம், வவுனியா இலக்கிய கலாமன்றம் ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரியப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நன்றி.

ஆலங்கேணி,
கிண்ணியா.

ச. அருளானந்தம்
கல்விப் பணிமனை
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கல்வி அதிகாரி திரு. ச. அருளானந்தம் கலை உள்ளம் கொண்டவர். பாட்டியற்றுவதில் நாட்டம் மிக உடைய வர். பாலர் கல்வியிலும் அவருக்கு நிறைவான அக்கறையும் ஈடுபாடும் உண்டு.

இத்தகைய கல்வியாளர் 'இன்பக் கனிகள்' என்னும் தலைப்பிலே பாட்டுக்கள் சிலவற்றைப் படைத்துத் தந்துள் ளார். பாலர் வகுப்புக்களிற் பயிலும் குழந்தைகள் ஆடுவ திலும் பாடுவதிலும் எவ்வளவு விருப்பம் உடையவர்கள் என்பதை அவ்வகுப்புகளிற் படிப்பிக்கும் ஆசிரியர்கள் நன்கு அறிவர். அந்த விருப்பத்துக்கு ஈடுகொடுக்கும் வகையிலே பொருத்தமான பாலர் பாட்டுக்கள் நிறைய வெளிவருதல் வேண்டும். இப்பொழுது நமது பள்ளிகளில் வழங்கி வரும் பாடல்கள் தொகையிலும் தரத்திலும் போதியவை என்று திருப்தி கொள்ளுதற்கில்லை. இன்னும் இன்னும் பாட்டுக் கள் வேண்டும்; இனிய இனிய பாட்டுக்கள் வேண்டும்.

இந்த வகையிலே கவிஞர் அருளானந்தரின் 'இன்பக் கனிகள்' பாலர்களுக்கு அவர் வழங்கும் அருமையான தமிழ் விருந்தாகும். 'அன்பு' தொடக்கம் 'ஔவை' வரை யிலான பாடல்கள் அகர வரிசைப்படி அமைந்துள்ளன. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள உயிர் எழுத்துக்களுடன் பழகிப் பரிச்சயம் கொள்வதற்கும் இந்தப் படைப்புகள் ஒரு விதத் தில் உதவும்.

கவிஞரின் முயற்சி போற்றத்தக்கது. 'அருள்' அவர் களின் ஓவியங்களும் உயரிய தரத்துடன் நேர்த்தியாய் அமைந்துள்ளமை சிறப்பாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் — இ. முருகையன்
1990-05-15 — முதுநிலைத் துணைப்பதிவாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | |
|---|---|
| அன்பு | 01 |
| ஆமை | 02 |
| இறைவன் | 03 |
| ஈ | 04 |
| உறவு | 05 |
| ஊர் | 06 |
| எறும்பு | 07 |
| ஏணி | 08 |
| ஐயர் | 09 |
| ஒட்டகம் | 10 |
| ஓணான் | 11 |
| ஔவை | 12 |
| சேவல் | 13 |
| பாம்பு | 14 |
| வண்ணத்துப்பூச்சி | 15 |
| தோகைமயில் | 16 |
| காந்தித் தாத்தா | 17 |
| கச்சான் காற்று | 18 |
| எங்கள் பாட்டி | 19 |
| குளம் | 20 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படையல் . . .

வன்செயலில்
சிதைந்து போன
பிஞ்சு
நெஞ்சங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

அன்புத் தம்பி ஓடிவா
அறிவைத் தேட நாடிவா
உன்னை நம்பி இருக்குது
உலகம் என்று பாடிவா

அன்பே உலகின் பெருந்தெய்வம்
அம்மா அப்பா குலதெய்வம்
உன்போல் உலகை நேசித்தால்
உயரும் வாழ்வு மகிழ்வோங்கும்

குருவி காகம் கொக்குந்தான்
கூடிப் பறந்து திரியும் பார்
அருவி ஓடும் மீனைப்பார்
அன்பு கொண்டு அணைத்துப்பார்

உயிர்கள் எல்லாம் கடவுளின்
உருவம் அன்பு கொள்ளநாம்
பயின்று வாழ்ந்து காட்டுவோம்
பாரில் உயர்ந்து வாழுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆமை

பெட்டி ஒன்று அசையுது
பொடி நடையும் புரியுது
கட்டுப் பெட்டி சட்டிபோல்
சாய்ந்து சாய்ந்து ஊருது

நாலு காலும் தெரியுது
நல்ல நடனம் நெளியுது
வாலும் இல்லை தலையதும்
வடிவாய் நீட்டிக் காட்டுது

எட்டி எட்டிப் பார்க்குது
எடுப்பாய்த் தலையை நீட்டுது
தட்டிப் பாரு ஆமைதான்
தலையை உள்ளே இழுக்குது

ஓடித் திரிந்த முயலதை
ஒருநாள் ஆமை வென்றதை
பாடித் திரிந்து ஆடுவோம்
பாடி ஆடி ஓடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன்

பச்சை இலை பளிங்கு வானம்
பார்த்து இருக்கும் பூக்களும்
உச்சிக்கிளை தாவும் குரங்கு
ஓடி வரும் மான்களும்

படமெடுத்து ஆடும் பாம்பு
பல்லி ஓணன் பறவையும்
கடவுள் தந்த செல்வமாம்
கடவுள் வாழ்த்துப் பாடுவோம்

வானில் நிலா வெள்ளிபூக்கும்
வாடைக் காற்று வீசிடும்
தேனளைந்த தென்றல் ஆடும்
சிந்து வண்டு பாடிடும்

கோயில் மணி ஓசையிலே
இறைவன் கோலம் தோன்றிடும்
வாயில் தேடி இறைவருவான்
வணங்கிச் சேவை செய்குவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ

குப்பை மேட்டில் நான்பிறந்தேன்
கூவித் திரிந்து அலைவேன்நான்
குப்பை கூளம் என்வீடு
கூடிப் பெருகி வாழ்வேன்நான்

உண்ணும் சோற்றில் இருப்பேனே
உணவுப் பண்டம் புசிப்பேனே
மண்ணின் மீதும் மலர்மேலும்
மகிழ்ந்து பறந்து துயில்வேனே

பாடிப் பாடிப் பறப்பேனே
பாய்ந்து நோயைத் தருவேனே
மூடி வைக்கா துணவின்மேல்
மொய்த்து ருசித்து உண்பேனே

தொல்லை தருவேன் பேரின்பம்
தொற்று நோயும் பரப்பிடுவேன்
பிள்ளை நீயும் சுகம்தேடில்
சுத்தம் பேணு உயிர்வாழு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவு

பத்து மாதம் சுமந்து எம்மை
பெற்றெடுத்தாள் அம்மா
சொத்து என்றே தான் அணைத்து
சுகத்தைத் தந்தார் அப்பா

அம்மா அப்பா தந்த வாழ்வு
அன்பு மலர்த் தோட்டமே
எம்மைக் காக்கும் தெய்வம் தந்த
உறவு என்றும் இனியதே

அண்ணன் அக்கா அருமைத் தம்பி
ஆச்சி மாமா மாமியும்
உண்மையான உறவு வந்து
உறுதி வாழ்விற் பெருகிடும்

மச்சான் மச்சாள் சித்தி யெங்கள்
வாழ்வின் பாலம் அல்லவோ
குச்சிப் பாட்டி தாத்தா பேத்தி
குலம் வளர்க்கும் உறவுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்

மக்கள் சேர்ந்து வாழுவார்
வடிவாய்ப் பேசி மகிழுவார்
தக்கோர் கூடிப் பேசுவார்
சான்றோர் வந்து கூடுவார்

கோயில் குளம் தேர்விழாக்கள்
கூடி வாழும் வீடுகள்
நோய் நொடிகள் தீர்க்கும்மருந்து
சாலை களும் இருக்குமாம்

பாட சாலை ஆடரங்கு
பள்ளி செல்லும் பாலர்கள்
கூடி ஆடும் சந்தைபூங்கா
கோடி உண்டு ஊரிலே

கார் சைக்கிள் கோச்சிஓடும்
கருமை யான வீதிகள்
பார் அடுக்கு மாடிமனை
பலதும் உண்டாம் ஊரிலே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்பு

ஒன்ருய்ச் சேர்ந்து வாழுமாம்
ஊர்ந்து ஊர்ந்து செல்லுமாம்
ஒன்றன் பின்ஞல் மற்றதும்
ஒழுங்காய்க் கூடிப் போகுமாம்

சோம்பல் இன்றி உழைக்குமாம்
சேர்த்து வைத்து உண்ணுமாம்
காம்பு இலை மரங்களில்
கூடும் வைத்து வாழுமாம்

உழைக்கும் போது சேமித்து
ஒதுக்கி வைக்கும் அனுபவம்
பிழைக்கும் மனிதன் எறும்பிடம்
பாடம் கொள்ள வேண்டுமே

எறும்பு போன்று வாழுவோம்
இனிதாய் என்றும் ஆடுவோம்
குறும்பு நீங்கி உலகிலே
குலம் விளங்கப் பாடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஏணி

ஏணி ஒன்று கட்டுவோம்
எடுத்துச் சுவரில் சாத்துவோம்
ஆணி பொருத்தி ஆடுவோம்
ஆடி ஏறி மகிழுவோம்

உயரம் இருக்கும் மரத்திலே
உள்ள மாங்காய் பிடுங்குவோம்
அயர ஆறி உண்ணுவோம்
ஆடிப் பாடி ஓடுவோம்

உயர உயரப் போகவே
உதவும் ஏணிப் படிகளே
உயர ஏறிப் போனபின்
உதைப்பார் ஏணி வீழவே

எம்மை உயர்த்தும் மனிதர்கள்
ஏணி போன்று உழைப்பவர்
தம்மைப் போற்றிப் புகழுவோம்
தரணி போற்ற வாழுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயர்

ஐயர் பூசை செய்கிறார்
அன்பாய்த் தீபம் காட்டுறார்
உய்ய நீறும் தருகிறார்
உயர்ந்து வாழச் சொல்கிறார்

கோயில் சுத்தம் செய்கிறார்
குளிர்ந்த நீரைத் தெளிக்கிறார்
தாயிற் சிறந்த இறைவனைத்
தாழ்ந்து பணிந்து வணங்கிறார்

நாட்டில் வாழும் மக்களும்
நல்ல வழியிற் சென்றிட
காட்டும் வழி என்றுமே
கடவுள் பாதம் கழுவுவார்

காலை மாலை இரவிலும்
கடவுள் பாதம் தொழுதுமே
வேலை தன்னைச் செய்குவோம்
வெற்றி பெற்று வாழுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒட்டகம்

நீள் கழுத்து நெளிந்த முதுகு
நிமிர்ந்து நிற்கும் ஒட்டகம்
நீள் பயணஞ் செல்ல மிகவும்
நேர்த்தி யான ஒட்டகம்

ஆடி ஆடிப் பாலை மண்ணில்
அசைந்து செல்லும் ஒட்டகம்
தேடி ஓடித் தேடா உணவைச்
சேர்த்து வைக்கும் ஒட்டகம்

பாலை வனத்து மனிதர்க் கெல்லாம்
பாலைக் கொடுக்கும் ஒட்டகம்
வாலைக் கிளப்பிப் பறக்கும் தட்டாய்
பாய்ந்து போகும் ஒட்டகம்

நீண்ட காலும் சிறிய கண்ணும்
ஊஞ்சல் ஆட்டும் நடையதும்
பூண்ட நண்பர் ஒட்டகம்
பார்க்க இன்பப் பெட்டகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓணான்

மரத்தின் மேலே ஏறுது
வடிவாய்த் தலையை ஆட்டுது
உரத்து விசிலை அடிக்குது
ஓடிப் புதரில் மறையுது.

தலை முதுகு வால்வரை
தடித்த முள்ளுத் தெரியுது
அலை வடிவாய்த் தோன்றவே
எழுந்து ஆடித் திரியுது

பூச்சி புழு பூக்களை
போட்டு ருசித்து உண்ணுது
மூச்சு வாங்க ஓடுது
முன்னால் எட்டிப் பார்க்குது

பாம்பு பகை தோன்றினால்
பாய்ந்து நிறத்தை மாற்றுது
தேம்பும் பாலன் மகிழவே
சிவந்த ஓணான் ஆடுது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவை

செந்தமிழ்ப் பாட்டி வந்தாளாம்
சீர்தமிழ் ஔவை என்றூராம்
அந்தணர் போற்ற வாழ்ந்தாளாம்
ஆத்தி சூடி தந்தாளாம்

நெல்லிக் கனியைக் கொடுத்தவனை
நானிலம் என்றும் போற்றிடவே
வெல்லத் தமிழில் சுவைசேர்த்து
வெண்பா பாடித் தந்தனளே

நாவற் பழமும் சுடுமாமோ
நன்றாய் ஊதிப் பார்த்தாளாம்
ஆவல் கொண்ட வேல்முருகன்
அதிரச் சிரித்து மகிழ்ந்தானும்

கொன்றை வேந்தன் தனிப்பாடல்
கோடிக் கணக்காய்த் தமிழ்பாடி
என்றும் வாழ்ந்து எம்முடனே
இருப்பாள் ஔவை வாழ்த்திடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சேவல்

காலை எம்மை எழுப்புமாம்
காலம் காட்டிச் செல்லுமாம்
மாலை மரத்தில் ஏறுமாம்
மாமா வீட்டுச் சேவலாம்

சிறகு அடித்துச் சிலிர்க்குமாம்
சிவத்தக் கொண்டை ஆடுமாம்
திறமும் கொண்டு சாடுமாம்
திரும்பி வந்து சுற்றுமாம்

கொக்க ரக்கோ கூவுமாம்
கொக்கொக் கொக்கோ பாடுமாம்
அக்கா வீட்டுச் சேவலை
அடித்து விரட்டித் துரத்துமாம்

குப்பை மேட்டைக் கிளறுமாம்
கோழிக் குஞ்சைக் காக்குமாம்
அப்பா தந்த சேவலாம்
ஆடி ஆடிப் போகுதாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாம்பு

பாம்பு ஊர்ந்து போகுதாம்
படம் விரித்து ஆடுதாம்
காம்பு நீண்ட பூவைப்போல்
காட்டும் படம் தெரியுதாம்

சீறிக் கிளம்பிப் பாயுமாம்
சீறும் நஞ்சைக் கக்குமாம்
மாறி வளைந்து ஓடுமாம்
மண்ணில் தடமும் பதியுமாம்

கோபம் வந்தால் கொத்துமாம்
கொடிய மிருகம் சாகுமாம்
சாபம் போட்டு ஆடினுல்
சலனம் வந்து சேருமாம்

மகுடி எடுத்து ஊதினுல்
மயங்கி ஆடி அடங்குமாம்
பகிடி யாரும் பண்ணிஞல்
பல்லின் பயனைக் காட்டுமாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வண்ணத்துப் பூச்சி

வண்ண வண்ணப் பூச்சியே
வண்ணச் சின்னப் பூச்சியே
உன்னைத் தொட்டுப் பார்க்கவே
உள்ளம் ஆசை கொள்ளுதே

பூவில் இருக்கும் தேனையே
போய்க் குடித்து வருகிறாய்
கூவி உன்னை அழைக்கிறேன்
கையில் வந்து அமருவாய்

வண்ண வண்ணச் சிறகுகள்
வந்த மாயம் என்னசொல்
எண்ணும் இடம் தேடிநீ
இசைந்து செல்லும் விந்தைசொல்

பூக்கள் மேலே இருக்கிறாய்
பறந்து பறந்து திரிகிறாய்
சோக்காய் உன்னைப் போலநான்
திரியச் சிறகு இல்லையே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோகை மயில்

நீலக் கழுத்துத் தோகைமயில்
நின்றே ஆடும் அழகைப்பார்
கோலத் தோகை வளைத்தாடி
கோலம் போடும் வண்ணம்பார்

முன்னும் பின்னும் முறுக்கோடு
முதுகும் வளைந்து எடுப்போடு
சின்னப் பெண்போல் குனிந்தாடும்
தங்க மயிலின் ஒயிலைப்பார்

மேகம் முழக்கம் செய்கிறது
மெல்லக் குயிலும் இசைக்கிறது
காகக் குரலும் சதங்கையென
சத்தம் செய்ய ஆடுதுபார்

அழகன் முருகன் வேலனையே
அடைந்து இன்பம் கண்டதுபோல்
பழகும் நடனம் செய்குதுபார்
பாரும் களித்து மகிழுதுபார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தித் தாத்தா

காந்தி என்றெரு தாத்தாவாம்
கல்கத் தாவில் இருந்தாரம்
சாந்தி மார்க்கம் தந்தாராம்
சாது வாக வாழ்ந்தாராம்

உண்மை பேசும் ஒருமனிதன்
உலகம் போற்றும் பெருமனிதன்
தண்மை யாளன் தகைசான்றேன்
சாந்த மூர்த்தி நம்காந்தி

காலால் உதைத்த வெள்ளையனும்
கண்ணீர் சிந்தி வாழ்ந்திடவே
மேலாம் வாழ்வு பெற்றரே
வாழ்வோம் அவரின் பாதையிலே

அன்பாய்ச் சேர்ந்து வாழுவோம்
அறிஞர் வாழ்வைப் போற்றுவோம்
ஒன்றே தெய்வம் பாடுவோம்
ஒன்றய் ஆடிக் கூடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சான் காற்று

கச்சான் காற்று அடிக்குது
கண்ணில் மண்ணைத் தூவுது
உச்சிப் பொழுது காயுது
உடலும் வியர்வை தோயுது

வீட்டு முகட்டைப் பிய்க்குமே
வெள்ளை உடுப்பைக் கெடுக்குமே
கூட்டிப் பெருக்கும் முற்றத்தில்
குப்பை கொட்டிப் போகுமே

மரம் செடிகள் ஆடுது
மாடு கன்று ஓடுது
உரத்துக் கச்சான் அடிக்குது
உள்ள மயிரும் கலையுது

பட்டம் விட்டு ஆடலாம்
பாடல் பாடி ஓடலாம்
தட்டுச் சுளவை கட்டலாம்
தாளம் போட்டுப் பாடலாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாட்டி

பாட்டி எங்கள் பாட்டி
பாட்டுச் சொல்லும் பாட்டி
கூட்டிப் பார்க்க விரலைக்
குவித்துப் பார்க்கும் பாட்டி

பொக்கை வாயைத் திறப்பாள்
புன்ன கையை உதிர்ப்பாள்
சொக்க வைக்கும் கதைகள்
சொல்லி வாழ்த்திச் செல்வாள்

கையிற் பொல்லும் கொண்டு
காலிற் செருப்பும் பூண்டு
பையிற் பழசும் கொண்டு
பாடிச் செல்வாள் பாட்டி

சுங்கான் வாயிற் புகையும்
சொகுசாய் முதுகும் அசையும்
தங்கக் கட்டிப் பாட்டி
செல்வாள் கையை ஆட்டி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குளம்

நல்ல மழை பெய்தது
நிலம் நனைந்து சிலிர்த்தது
வெள்ள மாக ஓடிநீர்
குளம் நிறைந்து சிரித்தது

கெண்டை வாளை மீன்வகை
குதித்துப் பாய்ந்து வளையிது
கண்ட கொக்குப் பறவைகள்
களித்துப் பறந்து வருகுது

வெள்ளை சிவப்புத் தாமரை
விரிந்து மலர்ந்து கிடக்குது
கொள்ளை அழகுக் குளத்திலே
காற்று நடனம் காட்டுது

குளத்து மதகு புகுந்துநீர்
குதித்து வாய்க்கால் ஓடுது
களத்தில் நெல்லுக் குவியிது
கஸ்டம் நீங்கிப் போகுது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org